# புவியியல்
## 1.தமிழ்நாடு - உற்பத்தித் தொழிற்சாலைகள்

### I. சரியான விடை : -

1. தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனம் **பொது** துறையாக இயங்கி வருகிறது.
2. கரும்புச்சக்கை **காகித** தொழிற்சாலைக்கு மூலப்பொருளாக பயன்படுகிறது.
3. இந்தியாவின் அதிக **உரம்** உற்பத்தி செய்யும் நிறுவனம் ஸ்பிக்
4. **குடிசை** தொழில் மிகக் குறைந்த முதலீடு கொண்டது.
5. தமிழ்நாட்டில் **காஞ்சிபுரம்** பாரம்பரியம் மிக்க தனித்த நெசவு தரத்திற்காக உலகமெங்கிலும் புகழ்பெற்றது.

### II. பொருத்துக : -

| | | | |
|---|---|---|---|
| 1. | சென்னை | - | தெற்காசியாவின் டெட்ராய்ட் |
| 2. | சிவகாசி | - | குட்டி ஜப்பான் |
| 3. | பெரம்பூர் | - | இணைப்புப் பெட்டி தொழிற்சாலை |
| 4. | கரூர் | - | நெசவுத் தலைநகரம் |
| 5. | கோயம்புத்தூர் | - | தென்னிந்தியாவின் மான்செஸ்டர் |

### III. குறு வினாக்கள் :

1. **தொழிற்சாலைகளை எவ்வாறு வகைப்படுத்தலாம் ?**

* மூலப்பொருள் * மூலதன அளவு
* தொழில் உரிமம் * உற்பத்தியாகும் பொருள்

2. **தொழிற்சாலையின் அமைவிடத்தை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை?**

* மூலப்பொருள் * எரிசக்தி * மூலதனம்
* தொழிலாளர் * போக்குவரத்து * சந்தை வசதி

3. **சர்க்கரைத் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் பொருட்கள் மற்றும் உபபொருட்கள் யாவை?**

**உற்பத்தி பொருட்கள்** : வெல்லம், கல்கண்டு, சர்க்கரை
**உபபொருட்கள்** : கரும்புச் சக்கை

4. **காகிதத் தொழிற்சாலைக்கு தேவையான மூலப்பொருட்களை பட்டியலிடுக.**

**மூலப்பொருள்கள்** : மூங்கில், புற்கள், கரும்புச் சக்கை
**உபமூலப்பொருள்கள்** : சோடா, சோடா உப்பு, குளோரின், கந்தகம், மரக்கூழ் , நீர்

5. **நுகர்வு பொருட்கள் என்றால் என்ன?**
தொழிற்சாலைகளில் இருந்து **நுகர்வோரை நேரடியாகச் சென்றடையும் பொருட்கள்** நுகர்வு பொருட்கள் எனப்படும்.
எ.கா : **பால் மற்றும் பிற உணவு பொருட்கள்**

**S.சுரேஷ்குமார், பட்டதாரி ஆசிரியர் நகரவை மகளிர் மேல்நிலைப்பள்ளி, ஈரோடு-3 CELL-9750048886**

6. **குடிசைத் தொழில் பற்றி சிறு குறிப்பு வரைக.**

- குடிசைத் தொழில் என்பது **மிகக் குறைந்த முதலீடு** கொண்டது
- குடும்பம் முழுமையும் வேலையைப் **பகிர்ந்து செய்யும் தொழிலாகும்.**
- உற்பத்தி **செலவும், அளவும்** குறைவு.

எ.கா : கோரைப் புல்லைக் கொண்டு பாய் பின்னுதல், மரப் பொம்மைகள், பனையோலைப் பொருட்கள்.

7. **தமிழ்நாட்டில் பரவிக் காணப்படும் நெசவாலைகள் அமைவதற்கான காரணங்கள் யாவை?**

- அயன மண்டல காலநிலை
- எளிதாகக் கிடைக்கும் மூலப்பொருள்கள்
- தடங்கலற்ற மின் விநியோகம்
- குறைந்த ஊதியத்தில் கிடைக்கும் தொழிலாளர்கள்

8. **தொழிற்கூடம் மற்றும் தொழிற்சாலை வேறுபடுத்திக் காட்டுக :**

| தொழிற்கூடம் | தொழிற்சாலை |
|---|---|
| தனி ஒரு பொருளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை தொழிற்கூடம் எனப்படுகிறது | ஒரே விதமான பொருட்களை உற்பத்தி செய்யும் பல தொழிற்கூடங்கள் ஓர் பரந்த நிலப்பரப்பில் அமைந்தால் அது தொழிற்சாலையாகும் |

9. **வேளாண்மை சார்ந்த மற்றும் கனிம வளம் சார்ந்த தொழிற்சாலைகளை வேறுபடுத்திக் காட்டுக :**

| வேளாண்மை சார்ந்த தொழிற்சாலைகள் | கனிம வளம் சார்ந்த தொழிற்சாலைகள் |
|---|---|
| விவசாய பொருட்களினை மூலப்பொருளாக கொண்டு உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் வேளாண்மை சார்ந்த தொழிற்சாலைகள் எனப்படும். | கனிம வளங்களைக் கொண்டு உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் கனிம வளம் சார்ந்த தொழிற்சாலைகள் எனப்படும். |
| எ.கா : பருத்தி ஆலை, சர்க்கரை ஆலை | எ.கா : பீங்கான் உற்பத்தி, சிமெண்ட் உற்பத்தி |

10. **தாவரப் பதனிடுதல் முறைக்கும் இரசாயனப் பதனிடுதல் முறைக்கும் உள்ள வேறுபாட்டினை எழுதுக.**

| **தாவரப் பதனிடுதல் முறை** | **இரசாயனப் பதனிடுதல் முறை** |
|---|---|
| தோலைப் பதனிட தாவரப் பொருளான மரப்பட்டைகளை பயன்படுத்தி பதனிடும் முறைக்கு தாவரப்பதனிடுதல் முறை என்று பெயர் | அமில பொருட்கள், குரோமியம் மற்றும் கொழுப்பு கொண்டு தோலைப் பதனிடும் முறையை ஈர நிலை முறை அல்லது இரசாயனப் பதனிடுதல் முறை என்று பெயர் |

## IV. பத்தியளவில் விடையளி :

1. **தொழில் உரிமத்தை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலைகள் பற்றி நீவிர் அறிவன யாவை?**

- தனித்தோ அல்லது கூட்டுச் சேர்ந்தோ தொழில் நடத்தப்பட்டால் அவை **தனியாற் தொழிற்சாலைகள்** எனப்படுகிறது.
- அரசாங்கத்தால் நிர்வகிக்கப்படும் தொழிற்சாலைகள் **பொதுத்துறையின்** கீழ் அடங்கும்.
  எ.கா : **தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனம் (TNPL)**
- மூலப்பொருளை உற்பத்திச் செய்வோர் கூட்டாக ஓர் தொழிற்சாலையை நிர்வகித்தால் அதனை **கூட்டுறவுத்துறை** என்கிறோம்.
  எ.கா : **சர்க்கரை ஆலைகள்**
- இருவேறு நிறுவனங்களின் கூட்டு முயற்சியால் செயல்படும் ஓர் தொழிற்சாலை **இணைத்துறையைச்** சார்ந்தது.
  எ.கா : திருநெல்வேலி மாவட்டம் **கூடங்குள அணுசக்தி நிலையம்** இந்தியா-ரஷ்யா அரசின் முயற்சியால் நிறுவப்பட்டதாகும்.

2 **தமிழ்நாட்டில் நெசவுத் தொழிற்சாலைகளின் பரவலை விவரி.**
**தமிழ்நாட்டில் நெசவாலைகள் அமைவதற்கான காரணங்கள்**

- அயன மண்டல காலநிலை
- எளிதாகக் கிடைக்கும் மூலப்பொருள்
- சந்தையில் பருத்திக்கான தேவை
- தடங்கலற்ற மின் விநியோகம்
- குறைந்த ஊதியத்தில் கிடைக்கும் தொழிலாளர்கள்

**மையப்பகுதிகள்** : கோயம்புத்தூர், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, திருப்பூர், காரமடை, ஈரோடு, பவானி, திண்டுக்கல், திருமங்கலம், மதுரை, பாளையங்கோட்டை, பாபநாசம், தேனி.

**தென் இந்தியாவின் மான்செஸ்டர்** : கோயம்புத்தூர் மண்டலம் மிகப்பெரிய அளவில் நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளதால் இதனை "தென் இந்தியாவின் மான்செஸ்டர்" என்று அழைக்கப்படுகிறது.



பாடசாலை

**நெசவுப் பள்ளத்தாக்கு** : திருப்பூர், ஈரோடு, கோயம்புத்தூர் ஆகிய மூன்று மாவட்டங்கள் தமிழ்நாட்டின் "நெசவுப் பள்ளதாக்கு" என்று அழைக்கப்படுகிறது.

**நெசவுத் தலைநகரம்** : தமிழ்நாட்டின் "நெசவுத் தலைநகரம்" என்ற சிறப்பு பெயரை கரூர் நகரம் பெற்றுள்ளது.

**3. தமிழ்நாட்டில் காகிதத் தொழிற்சாலைப் பற்றி எழுதுக :**

**இரண்டாம் இடம்** : இந்தியாவின் காகித உற்பத்தியில் ஆந்திராவிற்கு அடுத்தப்படியாக தமிழகம் இரண்டாம் நிலையில் உள்ளது.

**மூலப்பொருள்** : மூங்கில், புற்கள், கரும்புச்சக்கை

**உபமூலப்பொருள்** : சோடா, சோடா உப்பு, குளோரின், கந்தகம், மரக்கூழ், அதிக அளவில் தண்ணீர்.

**காகித தொழிற்சாலைகள்** : புக்காத்துறை, பவானி சாகர், பள்ளிபாளையம், புகளூர், பரமத்தி வேலூர், கோயம்புத்தூர், உடுமலைப்பேட்டை, தொப்பம்பட்டி, நிலக்கோட்டை, சேரமாதேவி.

**TNPL :** தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகிதம் நிறுவனம் (TNPL) உலக வங்கியின் உதவியுடன் 1979-ஆம் ஆண்டு கரூர் மாவட்டத்தில் புகளூருக்கு அருகாமையில் நிறுவப்பட்டது.

**TNPL உற்பத்தி :**

- உலகிலேயே மிக பெரிய ஆலையாக TNPL திகழ்கிறது.
- செய்தித்தாள் தவிர காகிதம், தொலைபேசி கையேடு, கணிணி அச்சுத்தாள், சுவரொட்டித் தாள்கள் மற்றும் நகல் அச்சுத்தாள் உற்பத்தியிலும் இந்நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

## 2.போக்குவரத்து மற்றும் தகவல் பரிமாற்றம்

**I. சரியான விடை : -**

1. அஞ்சல் துறையும் தந்தி சேவையும் **தனிநபர் தகவல் பரிமாற்றம்** தகவல் பரிமாற்றம் ஆகும்.
2. **போக்குவரத்து திட்டம்** என்பது தேசிய வளர்ச்சியின் உயிரோட்டம் ஆகும்.
3. கிழக்கு கடற்கரைச்சாலை **வங்காள விரிகுடா** கடற்கரைப் பகுதியோரமாக அமைக்கப்பட்டிருக்கிறது.
4. உலகத்தில் மிகப்பெரிய தரைவழிச் சேவை என்பது **இணையதளம்**
5. சிறிய துறைமுகம் என்பது **நங்கூரம் பாய்ச்சும் வசதி பெற்ற துறைமுகம்** ஆகும்.

**II. பொருத்துக : -**

| | | | |
|---|---|---|---|
| 1. | தங்க நாற்கரச்சாலை | - | தேசிய நெடுஞ்சாலை |
| 2. | கடலூர் | - | சிறிய துறைமுகம் |
| 3. | ஜி.பி.எஸ் | - | இடம் சுட்டும் கருவி |
| 4. | பத்திரிக்கைகள் | - | எழுத்து படிவம் |
| 5. | யூனினார் | - | தனியார் தொலைதொடர்பு நிறுவனம் |

## III. குறு வினாக்கள் :

1. **தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு வகையான சாலைகளைக் கூறு.**

* தேசிய நெடுஞ்சாலைகள் * மாநில நெடுஞ்சாலைகள்
* மாவட்டச் சாலைகள் * கிராமச் சாலைகள்

2. **தனியார் தொலைதூர சேவை நிறுவனங்கள் எவை?**

* டாடா * ரிலையன்ஸ் * வோடபோன்
* ஏர்செல் * ஐடியா * யுனிநார்

3. **தமிழ்நாட்டின் மூன்று முக்கியத் துறைமுகங்களைக் கூறு.**

* சென்னை * தூத்துக்குடி * எண்ணூர்

4. **சிறிய துறைமுகம் என்றால் என்ன? உதாரணம் கொடு.**

* சிறிய துறைமுகங்கள் கப்பல்கள் நங்கூரமிட்டு பொருட்களை கப்பலிலிருந்து கரைக்கு கொண்டு செல்ல உதவுகிறது.
எ.கா : கடலூர், நாகப்பட்டினம், குளச்சல், இராமேஸ்வரம்.

5. **தமிழ்நாட்டின் முக்கிய பன்னாட்டு விமான நிலையங்கள் யாவை?**

* சென்னை (அண்ணா) * கோயம்புத்தூர் * திருச்சிராப்பள்ளி

6. **எஸ்.டி.டி. (STD) விரிவாக்கு.**

SUBSCRIBER TRUNK DIALING

7. **பொது இணையதளம், தனித்த இணையதளம் வேறுபடுத்துக**

| பொது இணையதளம் | தனித்த இணையதளம் |
|---|---|
| அனைவரையும் மின்னணு வலைப்பின்னல் ஒன்றிணைக்கும் இணையதளம் | INTERNET எனும் வலைப்பின்னல் மூலம் தனியார் நிறுவனங்களுக்கு சொந்தமான உள்கட்டமைப்புகள் மூலம் குறிப்பிட்ட அந்த நிறுவனத்திற்குள்ளோர் மட்டுமே ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொள்ள முடியும். |
| கல்விப்பணியிலும் மற்றும் அறிவாற்றலை பரிமாறிக் கொள்வதிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது. | உலகிலுள்ள அத்தனை மனிதர்களும் எந்த இடத்திலிருந்தும் தனக்குத் தேவையான மற்றொருவருடன் தொடர்பு கொள்ள முடியும். |

## IV. பத்தியளவில் விடையளி :

1. **தகவல் பரிமாற்ற தொழில்நுட்பத்தால் கிடைக்கும் பயன்கள் யாவை?**

இது தனிப்பட்டவர்களின் வாழ்க்கையில் மட்டும் முக்கிய பங்கு வகிக்காமல், **வர்த்தகம், கல்வி ஆகியவற்றில் துணைக்கோள்கள் மூலம் உதவுகிறது.**

- வேலைவாய்ப்பு, பல்கலைக்கழகங்களில் சேர்க்கை, பிறப்பு / இறப்பு **சான்றிதழ்களை மின் அஞ்சல் மூலம் பெறவும், அனுப்பவும்** வழிவகை செய்கிறது.
- பொருட்களை **விற்பனை செய்வதும், வாங்குவதும்** (மின் வர்த்தகம்) உபயோகத்தில் உள்ளது.
- மருத்துவம் எளிதில் அணுகமுடியாத பகுதியில் வசிக்கும் மக்களுக்கு **மருத்துவ சேவையை** அளிக்கிறது.
- **தொலைபேசிக் கட்டணம், மின்சாரக் கட்டணம், பயணச்சீட்டு பதிவு செய்தல்** ஆகியவை இணையதளம் மூலம் செலுத்த முடிகிறது.
- இணைய தளம் மூலம் **பங்குசந்தை மூலம் பங்குகளை DMAT படிவத்தில் வாங்க / விற்க** முடிகிறது.
- இணையதளத்தின் மூலம் தொலைதூரத்தில் உள்ளவர்கள் அல்லது ஆய்வு மாநாடுகளில் **வலைதள படம் பிடிக்கும் கருவி (Web Camera) மூலம்** கலந்தாய்வு விவாதத்தில் பங்கேற்க முடிகிறது.
- **ஜி.பி.ஆர்.எஸ்** எனும் கருவி மூலம் செய்திகளை வானொலி அலைகளின் மூலம் சொந்த குரல் செய்தியாக (Voice Mail) அனுப்ப முடியும்.
- **ஜி.பி.எஸ்** என்ற கருவி பல்வேறு செயற்கைக் கோள்களிலிருந்து சமிக்கைகளை (Signals) பெற்று பல்வேறு இடங்களின் புவியியல் அமைவிடங்களை தேவைப்படும் பலருக்கு தெளிவாக உணர்த்துகிறது.

**2. தமிழ்நாடு சாலைப் போக்குவரத்தில் சமீபத்தில் ஏற்பட்டுள்ள சிறப்பான முன்னேற்றங்கள் யாவை?**

- மாநில நெடுஞ்சாலையின் **ஒரு வழிப் போக்குவரத்து, இரு வழி மற்றும் பலவழிச் சாலை** போக்குவரத்துக்காக மாற்றப்பட்டுள்ளது.
- அடையாரிலுள்ள மத்திய கைலாஷ் என்ற பகுதியிலிருந்து பழைய மகாபலிபுரம் சாலையிலுள்ள சிறுசேரி வரை 24 கி.மீ. நீளத்திற்கு சாலை அகலப்படுத்தப்பட்டு **விரைவு வழித்தடமாக** மாற்றப்பட்டுள்ளது.
- சென்னையையும், கடலூரையும் பாண்டிச்சேரி வழியாக இணைக்கும் **கிழக்கு கடற்கரைச் சாலை** அமைக்கப்பட்டிருக்கிறது.
- **தங்க நாற்கர சாலைத்திட்டம்** தமிழ்நாட்டில் 1232 கி.மீ தொலைவிற்கு அமைக்கப்பட்டுள்ளது.
- **புறநகர் சாலைப் போக்குவரத்து** தடங்கள் புறவழிச் சாலைகள் மூலம் திருப்பி விடப்பட்டுள்ளதால் போக்குவரத்து நெரிசல் தவிர்க்கப்பட்டுள்ளது.
- சென்னை கோயம்பேட்டில் அமைக்கப்பட்டுள்ள புறநகர் பேருந்து நிலையம் **ஆசியாவிலேயே மிகப்பெரிய பேருந்து நிலையமாகும்.**
- தேசிய நெடுஞ்சாலைகள் செல்லும் வழியில் **பாலங்களும் மேம்பாலங்களும்** கட்டப்பட்டுள்ளன.
  எ.கா : சென்னை விமான நிலைய மேம்பாலம், பெரம்பூர் மேம்பாலம், அண்ணா மேம்பாலம்.

## 3. பேரிடர் மேலாண்மை

**I. சரியான விடை : -**

1. புவி இயற்பியல் இடர் **புவியின் உள்ளமைப்பு** விசையினால் உருவாகின்றது.
2. தேசியப் பேரிடர் மேலாண்மையின் தலைவர் **பிரதமர்**
3. நிகழ்வின் தாக்கத்தைக் குறைக்கும் செயல்பாடு **தணித்தல்**



Padasalai.Net

## II. பொருத்துக :-

1. மனிதப் புறக்கணிப்பு - மனிதனால் உருவாகும் பேரிடர்
2. நிலச்சரிவு எச்சரிக்கை - புவி அமைப்பியல் அளவைத் துறை
3. தமிழ்நாடு - மிதமான நேர்வு அதிர்வு மண்டலம்
4. உச்சவெப்பநிலை - வானிலை இடர்
5. பனிப்பாறை வீழ்ச்சி - திடீர் பணிநகர்வு

## III. குறு வினாக்கள் :

**1. பேரிடர் மேலாண்மை வரையறு.**

* திட்டமிடல், நிர்வகித்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் செயல்படுத்தலின் வாயிலாக உயிர்சேதத்தையும் பொருட்சேதத்தையும் தடுக்கிறது.
* மக்களையும் அவர்களது உடைமைகளையும், பாதுகாக்கும் வழிமுறை.

**2. புயலினால் ஏற்படும் பாதிப்புகளை தடுக்கும் வழிமுறைகள் இரண்டு கூறுக.**

* தங்கும் வசதி படைத்த வீடுகள் அடங்கிய மண்டலங்கள்
* சதுப்புநிலக்காடுகள் வளர்ப்பு

**3. வறட்சியின் தாக்கங்களை குறைக்கும் வழிமுறைகள் எவை?**

* தெளிப்பு நீர் பாசனமுறை * சொட்டுநீர் பாசன முறை
* குழிவு ஏற்படுத்தி நீர்தேக்கும் முறைகள் * செயற்கைகோள் மூலம் பயிரிடும் நிலம் அறியும் முறை * வறட்சியை தாங்க கூடிய தகுந்த பயிர்களை தேர்வு செய்தல்.

**4. வேறுபடுத்துக**

| இடர் | பேரிடர் |
|---|---|
| இந்நிகழ்வு இயற்கையினாலோ, மனிதனாலோ ஏற்படும் கேடு | பெரும் பொருட்சேதத்தையும், அதிக உயிர் இழப்பையும் அதோடு சுற்றுச்சூழலில் பெரும் மாற்றத்தையும் ஏற்படுத்தும். |
| காயங்கள், உயிர் இழப்பு மற்றும் பொருட்சேதம் ஏற்படுகின்றது. | மக்களின் பொருளாதார சமூக, கலாசார பண்பாட்டு வாழ்க்கை முறையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். |

**5. சுனாமியினால் ஏற்படக்கூடிய சுற்றுப்புறத் தாக்கங்களை எழுதுக.**

❖ கடற்பகுதியில் உள்ள நன்னீர்ப் பகுதிகளில் மாற்றங்களை ஏற்படுத்துகிறது.
❖ பயிரிடப்படும் நிலங்களில் கடல் நீரைப் படிய வைத்து மண்ணின் தரத்தை குறைக்கிறது.

**S.சுரேஷ்குமார், பட்டதாரி ஆசிரியர் நகரவை மகளிர் மேல்நிலைப்பள்ளி, ஈரோடு-3 CELL-9750048886**

6. **காடுகள் எரிவதால் ஏற்படும் சுற்றுப்புறத் தாக்கங்கள் யாவை?**

- கர்பன்-டை-ஆக்சைடின் வெளியேற்றம் உலக வெப்ப மயமாதலுக்கு காரணம் ஆகிறது.
- உயிரனப் பன்மையின் இழப்பு
- நீர்ச்சுழற்சி
- ஒளிச்சேர்க்கை செயல்பாட்டின் குறைவு
- உடல்நலம் பாதிப்பு

## IV. விரிவான விடையளி :

1. **பேரிடர் மேலாண்மை சுழற்சி - விவரி.**

**தயார் நிலை :**

- ஓர் இடத்தின் நில அமைப்பு, சரிவுகள், காலநிலைக்கூறுகள், மக்கள்தொகை போன்ற அடிப்படைத் தவல்களை வலியுறுத்தல்.
- பேரிடர் ஏற்படும் பகுதிகளைப் பட்டியலிடுதல் - புவி அதிர்வால் பாதிக்கப்படும் மண்டலம், புயலால் பாதிக்கப்படும் மண்டலம்.
- தெரிந்த இடங்களை அடையாளம் காட்டுதல் - எடுத்துக்காட்டாக அடையார் மற்றும் வேளச்சேரிப் பகுதிகள்.
- பேரிடர் ஏற்படும்பொழுது முறையான திட்டமிடல்.
- பேரிடர் நிகழும்பொழுது பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்வதற்கு அடையாளம் காணல்.

**பொறுப்பு :**

- பேரிடர் ஏற்படும் முன்பு எச்சரிக்கை விடுதல்.
- பேரிடர் நிகழ்வுப் பகுதியிலிருந்து பாதிக்கப்பட்டவர்களை தேடுதல், பாதுகாத்தல் மற்றும் வெளியேற்றுதல்.
- மக்களுக்குத் தேவையான பொருள்களைக் கிடைக்க ஏற்பாடு செய்தல். எடுத்துக்காட்டாக உணவு, உடை, இருப்பிடம், மருந்து.
- பேரிடரின் தன்மையை மதிப்பீடு செய்தல்.

**தணித்தல் :**

- நிகழ்வின் தாக்கங்களை குறைக்கும் அனைத்துச் செயல்களும் தணித்தலாகும்.

**மீட்சித்திறன் :**

- தற்காலிகக் குடியிருப்புகளை அமைத்துத் தருதல், மருத்துவப் பாதுகாப்பு, ஆலோசனை வழங்குதல், உற்றார் உறவினரை ஒன்று சேர்த்தல், நிதி உதவி மற்றும் பிற உதவிகள் செய்தல்.
- பாதிக்கப்பட்ட பகுதிகளை நிர்மாணித்தல் மற்றும் மறு சீரமைப்பு செய்தல்.

2. **இயற்கைப் பேரிடர் முன் எச்சரிக்கை செய்யும் இந்திய நிறுவனங்களின் பெயர்களை எழுதுக.**

| பேரிடர் | துறைகள் |
|---|---|
| **வெப்ப அலை / குளிரலை / புயல்/ நில நடுக்கம்** | இந்திய வானிலை ஆராய்ச்சி நிலையம் |
| **சுனாமி** | இந்திய தேசிய கடல் மற்றும் தகவல் ஆய்வு மையம் |
| **நிலச்சரிவு** | இந்திய புவி ஆய்வு மையம் |

**S.சுரேஷ்குமார், பட்டதாரி ஆசிரியர் நகரவை மகளிர் மேல்நிலைப்பள்ளி, ஈரோடு-3 CELL-9750048886**

| | |
|---|---|
| **வெள்ளம்** | மத்திய நீர்க்குழு |
| **பனிப்பாறை வீழ்ச்சி** | பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் முன்னேற்ற நிறுவனம் |

3. **புயல்களைப் பற்றி எழுதுக :**

- ❖ புயல் என்பது வளிமண்டலத் **தாழ்வு அல்லது குறைந்த அழுத்த பகுதியாகும்.**
- ❖ புயல்கள் அதன் மத்தியில் **குறைந்த அழுத்தமும், சுழன்ற காற்றும்** கொண்டதாகும்.
- ❖ புவியின் **வடகோளார்த்தத்தில்** இக்காற்று கடிகாரச் சுழற்சியாகவும், **தென்கோளார்த்தத்தில்** எதிர் கடிகாரச் சுழற்சியாகவும் வீசுகிறது.
- ❖ மிகவும் அமைதியான, தெளிவான மேகங்களற்ற புயலின் மையப்பகுதி **புயலின் கண்பகுதி** என்று அழைக்கப்படுகிறது.
- ❖ நமது மாநிலத்தில் 13 **கடற்கரை மாவட்டங்கள்** இப்புயலால் பாதிக்கப்படுகிறது.
- ❖ புயல்கள் **மே- ஜூன்** மற்றும் **அக்டோபர் - நவம்பர்** மாதங்களில் ஏற்படுகிறது.
- ❖ புயல்கள் எப்பொழுதும் **வேகக் காற்றையும், மழை வீழ்ச்சியையும், வெள்ளப் பெருக்கையும், அலை எழுச்சியையும்** உடையதாக விளங்குகிறது.

## வரலாறு

## 1. நவீன காலத்துவக்கம்

I. **சரியான விடை : -**

1. மறுமலர்ச்சியின் பிறப்பிடம் **இத்தாலி**
2. சமய சீர்திருத்தத்திற்கு மூலக் காரணமானவர் யார்? **மார்ட்டின் லூதர்**
3. துருக்கியர்களால் கான்ஸ்டாண்டின் நோபிள் கைப்பற்றப்பட்ட ஆண்டு **கி.பி.1453**
4. மோனலிசா என்ற புகழ்பெற்ற ஓவியத்தைத் தீட்டியவர்? **லியானார் டோடாவின்சி**
5. யேசு சங்கம் என்ற சமய அமைப்பைத் தோற்றுவித்தவர்? **இக்னேஷியஸ் லயோலா.**
6. வாஸ்கோடகாமா கள்ளிக்கோட்டையை வந்தடைந்த ஆண்டு **1498.**

II. **பொருத்துக : -**

| | | | |
|---|---|---|---|
| 1. | தாந்தே | - | தெய்வீக இன்பியல் |
| 2. | மைக்கேல் ஏஞ்சலோ | - | இறுதித் தீர்ப்பு |
| 3. | ரோஜர் பேகன் | - | நவீன அறிவியலின் தந்தை |
| 4. | மாலுமி திசைக்காட்டும் கருவி | - | புதிய அறிவியல் கண்டுபிடிப்பு |
| 5. | அமெரிக்கோ வெஸ்புகி | - | அமெரிக்கா |

## III. குறுகிய விடையளி : -

**1. மறுமலர்ச்சி இயக்கத்தின் இருபெரும்பிரிவுகள் யாவை?**

* மனிதத்துவ இயக்க கட்டம் மற்றும் பண்டைய கலை இலக்கியங்கள் புத்துயிர் பெற்ற கட்டம்.
* செம்மைக் கலைகள் முறைப்படுத்தப்பட்ட கட்டம்.

**2. மறுமலர்ச்சிக் கால ஓவியங்கள் பற்றி சிறு குறிப்பு வரைக.**

| | | |
|---|---|---|
| * மைக்கேல் ஏஞ்சலோவின் | - | இறுதித் தீர்ப்பு |
| * லியானார் டோடாவின்சியின் | - | மோனலிசா இறுதி இரவு உணவு |
| * ரபேலின் | - | மடோனா |
| * திதியன் | - | ஓவியங்களில் வண்ணக்கலவை |
| * மூத்த பீட்டர் புரூகலின் | - | மக்கள் ஓவியங்கள் |

**3. மறுமலர்ச்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான அறிவியல் கண்டுபிடிப்பு யாது?**

* தொலைநோக்கியை கலீலியோ கண்டுபிடித்தார்
* நியூட்டன் புவியீர்ப்பு விசையைக் கண்டுபிடித்தார்
* சூரியனை பூமி சுற்றி வருகிறது என்பதை கோபர்நிக்கஸ் கண்டுபிடித்தார்.
* அச்சுப்பொறி கண்டுபிடிக்கப்பட்டது.

**4. மறுமலர்ச்சி வரையறு.**

* மறுமலர்ச்சி என்றால் புதுப்பித்தல், மீட்டுருவாக்கம், மறுபிறப்பு என்று பொருள்படும்.
* மறுமலர்ச்சி விடுதலை மற்றும் வெளிப்பாடு ஆகியவற்றைக் குறிக்கிறது

**5. பாவமன்னிப்புச் சீட்டு பற்றி குறிப்பு வரைக.**

பாவமன்னிப்புச் சீட்டு, ஒருவனது பாவச் சுமையைக் குறைக்கும் என்று கூறப்பட்டது. ஒருவன் பாவச் செயல் புரிந்துவிட்டு போப்பிற்க்கு ஒரு குறிப்பிட்ட தொகையை அளிப்பதன் மூலம் தண்டனையில் இருந்து தப்பிவிட முடியும் என்ற நிலையை உருவாக்கியது.

**6. டிரெண்ட் கவுன்சில் - வரையறு.**

1545 முதல் 1563 வரை செயல்பட்ட டிரெண்ட் சபை கத்தோலிக்க திருச்சபையை சீர்திருத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

**7. மாலுமி ஹென்றி பற்றி குறிப்பு தருக.**

* போர்ச்சுக்கீசிய இளவரசர் ஹென்றி மாலுமிகளுக்காக பயிற்சிப் பள்ளியை ஏற்படுத்தினார்.
* மாலுமிகளுக்குத் திசைக்காட்டும் கருவி மற்றும் ஆஸ்ட்ரோலேப் உபயோகிக்கும் முறையைக் கற்றுக் கொடுத்தார். எனவே, இவர் மாலுமி ஹென்றி என்று அழைக்கப்பட்டார்.

8. **புதிய கடல் வழி கண்டுபிடிப்புகளின் விளைவுகள் யாவை?**
* இந்தியா, சீனா, அமெரிக்கா, மெக்சிக்கோ போன்ற நாடுகளுக்கு கண்டறியப்பட்ட கடல்வழி மூலம் வாணிபம் நடைப்பெற்றது.
* பசுபிக் பெருங்கடல் கண்டுபிடிக்கப்பட்டது.

## IV. தலைப்பு வினா :

### 1. இத்தாலியில் மறுமலர்ச்சி :

அ) ஐரோப்பாவின் பள்ளி என்று அழைக்கப்படும் நாடு யாது? **இத்தாலி**
ஆ) மறுமலர்ச்சிக்கால கலையின் முன்னோடி யார்? **பெட்ராக்**
இ) "மனித உடலமைப்பு பற்றிய ஏழு நூல்கள்" என்ற நூலை எழுதியவர் யார்? **ஆண்ட்ரூ வெசாலியஸ்**
ஈ) வண்ணத்தில் புகழ்பெற்றவர் யார்? **திதியன்**

### 2. சமயச் சீர்த்திருத்தம் :

அ) மார்டின் லூதர் போராட்டத்தில் ஈடுபட உடனடிக் காரணம் என்ன? **பாவமன்னிப்புச் சீட்டுகள் விற்பனையே உடனடிக் காரணம் ஆகும்.**

ஆ) புராட்ஸ்டண்டுகள் என அழைக்கப்படுபவர் யார்? **லூதரின் ஆதரவாளர்கள்**
இ) புனித சடங்குகளில் ஏழிலிருந்து மூன்றாக குறைக்கப்பட்டவை யாவை?
*** ஞானஸ்நானம் * திருமணம் * திருவிருந்து சடங்குகள்**
ஈ) ஜான்டெட்சல் என்பவர் யார்? **டொமினிக்கன் தலைமைப் பாதிரியார்.**

### 3. இயேசு சபை :

அ) இயேசு சங்கத்திதை நிறுவியவர் யார்? **இக்னேஷியஸ் லயோலா.**
ஆ) எந்த ஆண்டு இயேசு சங்கம் நிறுவப்பட்டது? **1540 ஆம் ஆண்டு**
இ) எத்தனை உறுப்பினர்கள் இயேசு சங்கத்தில் இருந்தனர்? **60 உறுப்பினர்கள்**
ஈ) சமய சீர்திருத்த மறுப்பு இயக்கத்தின் நிறுவனங்கள் யாவை? **இயேசு சபை, டிரெண்ட் கவுன்சில்**

### 4. புதிய கண்டுபிடிப்புகள் :

அ) நன்னம்பிக்கை முனை எனப் பெயரிட்டவர் யார்? **பார்த்தலோமியா டயஸ்**
ஆ) கிறிஸ்ட்டோபர் கொலம்பஸ் எதனைக் கண்டுபிடித்தார்? அமெரிக்கா (புதிய உலகம்)
இ) கிறிஸ்ட்டோபர் கொலம்பஸ் பயணம் மேற்கொண்ட மூன்று கப்பல்களின் பெயர்கள் யாவை? **சான்டா மரியா, நினா மற்றும் பின்டா**
ஈ) பசுபிக் பெருங்கடல் என பெயரிட்ட போர்ச்சுக்கீசிய கண்டுபிடிபபாளர் யார்? **பெர்டினான்டு மெகல்லன்.**



பாடசாலை.Net

## V. விரிவான விடையளி :

### 1. மறுமலர்ச்சியின் விளைவுகள் யாவை?

* இலக்கியத்தின் முன்னேற்றத்தால் மக்களிடையே **சிந்தனை ஆற்றல்** வளர்ச்சியுற்றது.
* மலர்ச்சியால் **தேசிய மொழிகள்** வளர்ச்சியுற்றன.
* மக்களின் **படைப்புத்திறன்** அதிகரித்தது. இது **புதிய கண்டுபிடிப்புகளுக்கு** வழிகோலியது.
* தொல்பொருள் **நினைவுச் சின்னங்கள்** மீது நாட்டம் கொண்டனர். இதனால் **அகழ்வாராய்ச்சி அறிவியல்** உருவாயிற்று.
* **பகுத்தறிந்து ஆராயும் சிந்தனையால்** மக்களுக்கு சமய நம்பிக்கையில் உள்ள குறைபாடுகளைத் தெரிந்து கொள்ள முடிந்தது.
* இங்கிலாந்து, பிரான்ஸ், ஹாலந்து, போர்ச்சுகல் மற்றும் ஸ்பெயின் போன்ற **தேசிய நாடுகள்** உருவாயிற்று.
* கிறித்துவ கோட்பாடுகள் மிகவும் பலவீனப்பட்டு, **மானிட உணர்வுகளுக்கு உயிர்** கொடுக்கப்பட்டது.
* வரலாற்றியல், **அறிவியல் அடிப்படையில்** மாற்றியமைக்கப்பட்டது.

### 2. புவியியல் கண்டுபிடிப்புகளுக்கான காரணங்கள் யாவை?

* மறுமலர்ச்சி காலம் எல்லாவித **இடைக்கால மூட நம்பிக்கை** மக்கள் மனதில் இருந்து நீக்கியது.
* உலகின் பல்வேறு நிலப்பகுதிகளைக் கண்டுபிடிக்கும் **துணிச்சல் உணர்வை** வளர்த்தது.
* அறிவியல் அறிஞர்கள் **பூமி உருண்டை வடிவம்** கொண்டது என்று கண்டுபிடித்தனர்.
* அறிவியல் கண்டுபிடிப்புகளில் **திசைகாட்டும் கருவி** திசைகளை அறிந்து கொள்ள உதவியது.
* திசைகாட்டும் கருவி கடலில் திசை தெரியாமல் தவிக்கும்போது **திசையறிந்து கடற்பயணம்** தொடர உதவியது.
* ஆட்டோமான் துருக்கியர்கள் கி.பி1453-இல் கான்ஸ்டான்டிநோபிளை கைப்பற்றியதால் **புதிய கடல் வழிகளை** கண்டுபிடிக்க வேண்டியதாயிற்று.
* **மங்கோலிய படையெடுப்புகள்** ஐரோப்பா பற்றிய புவியியல் சிந்தனைகளை விரிவுபடுத்தத் தூண்டியது.
* வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபம் பற்றிய ஆவலை **சிலுவைப் போர்கள்** அதிகமாக உருவாக்கின.

## 2. தொழிற்புரட்சி

### I. சரியான விடை : -

1. தொழிற்புரட்சியினால் உற்பத்தி **விரைவானது.**
2. தொழிற்புரட்சியின் தாயகம் **இங்கிலாந்து**
3. கிரேட் பிரிட்டன் ஒரு **தீவு.**

**S.சுரேஷ்குமார், பட்டதாரி ஆசிரியர் நகரவை மகளிர் மேல்நிலைப்பள்ளி, ஈரோடு-3 CELL-9750048886**

4. காட்டன் ஜின்னி என்ற விதை நீக்கும் கருவியைக் கண்டுபிடித்தவர்.**எலிவிட்னி**
5. இங்கிலாந்தில் **1830-ல்** முதல் பயணியர் தொடர்வண்டி இயக்கப்பட்டது.

## II. பொருத்துக : -

| | | | |
|---|---|---|---|
| 1. | ஜான்கே | - | பறக்கும் நாடா |
| 2. | ஜேம்ஸ் வாட் | - | புதிய நீராவி இயந்திரம் |
| 3. | பாரடே | - | டைனமோ |
| 4. | மெக் ஆதம் | - | சாலை |
| 5. | ஹம்பரி டேவி | - | பாதுகாப்பு விளக்கு |

## III. தலைப்பு வினா : -

**1. ஜவுளித்துறை :**

அ) எத்துறையில் முதன்முதலில் கண்டுபிடிப்புகள் ஏற்பட்டது? **ஜவுளித்துறை**
ஆ) பறக்கும் நாடாவைக் கண்டுபிடித்தவர் யார்? **ஜான்கே**
இ) தையல் இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர் யார்? **எலியாஸ் ஹோவே**
ஈ) காட்டன் ஜின் எந்த ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது. **1793-ஆம் ஆண்டு**

**2. சக்திகளின் கண்டுபிடிப்பு :**

அ) 1769-இல் புதிய நீராவி இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர் யார்? **ஜேம்ஸ் வாட்**
ஆ) பாதுகாப்பு விளக்கைக் கண்டுபிடித்தவர் யார்? **ஹம்பரி டேவி**
இ) 1855-இல் பெரிஸ்மர் எதனைக் கண்டுபிடித்தார்?
**இரும்பு எ஼கு உற்பத்தி செய்யும் முறை**
ஈ) தூய இரும்பு எ஼கு உருக்கும் முறையைக் கண்டறிந்தவர் யார்? அது எதற்குப் பயன்படுகிறது?
*** பெர்ஸ்மர்**
*** இது வாகன உற்பத்தி, கட்டுமானம், வீட்டு உபயோகப் பொருட்கள் செய்ய பயன்படுகிறது.**

## III. குறுகிய விடையளி : -

**1. தொழிற்புரட்சி என்பதன் பொருள் யாது?**
தொழிற்புரட்சி என்பது விவசாயம் மற்றும் கைவினைத்தொழில் செய்யும் உழைப்பாளிகளை இயந்திர உற்பத்தி, தொழிற்சாலைகள், மூலதனம், பரிவர்த்தனை போன்றவற்றை மையப்படுத்திய பொருளாதார முறைக்கு மாற்றுவதைக் குறிப்பதாகும்.

**2. சமத்துவத்தின் நோக்கம் யாது?**
செல்வம் ஒரு சிலரிடம் சென்றடையாமல் அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டு ஏழை, பணக்காரன் என்ற வேறுபாடு மறைய வேண்டும் என்பதாகும்.

**3. கார்ல் மார்க்ஸ் என்பவர் யார்? அவரின் கொள்கை யாது?**

* கார்ல்மார்க்ஸ் என்பவர் ஜெர்மனி நாட்டின் சமத்துவவாதி
* இவர் மார்க்ஸிசம் என்ற கோட்பாட்டை வெளியிட்டார்.

V. **விரிவான விடையளி : -**

1. **தொழிற்புரட்சிக்கான காரணங்கள் யாவை?**

1. **பழமையான விவசாய முறைகள்** வீழ்ச்சியடையலாயின.
2. புதிய காலனி நாடுகளில் இங்கிலாந்தில் செய்யப்பட்ட **பொருட்களுக்கான தேவை** அதிகரித்துக் கொண்டேபோனது.
3. வர்த்தக விரிவாக்கத்தின் விளைவாக **புதிய நாடுகள் மற்றும் புதிய கடல்வழி** கண்டுபிடிப்புகள் ஏற்பட்டன.
4. ஐரோப்பிய நாடுகளில் **மக்கள் தொகை பரவல்** வேகமாகியது.
5. விஞ்ஞான வளர்ச்சி **உற்பத்தி முறையில் புரட்சியை** ஏற்படுத்தியது. இத்துடன் பலஇயற்கை சூழ்நிலைகளும் தொழிற்புரட்சிக்கு சாதகமாயின.
6. வியாபார விரிவாக்கத்தின் விளைவாக **புதிய சந்தைகளைத்** தேடினர்.
7. முதலாளிகளின் ஊக்கத்தினால் அறிவியல் அறிஞர்கள் **இயந்திரங்களை கண்டுப்பிடித்தனர்.** பின் ஐரோப்பிய நாடுகள் குடியேற்றங்களை சுரண்டின.
8. புதிய இயந்திரங்களின் உதவியால் மக்கள் **பொருட்களை பெருமளவில் உற்பத்தி செய்தனர்.**

2. **தொழிற்புரட்சியினால் ஏற்பட்ட விளைவுகள் யாவை?**

*** சமூகத்தில் ஏற்பட்ட தாக்கம் :**

1. கிராமப் பகுதியிலிருந்து மக்கள் தொழிற்சாலைகள் இருந்த நகரங்களுக்கு ஈர்க்கப்பட்டனர்.
2. அதனால் பல தொழில் நகரங்கள் உருவாயின. மக்கள் தொகைப் பெருக்கத்தால் சுகாதார சீர்கேடு ஏற்பட்டது.
3. பழைய சமுதாயப் பிரிவுகள் அழிந்து "முதலாளிகள், தொழிலாளிகள்" என்ற இரண்டு புதிய பிரிவுகள் தோன்றின.

*** அரசியல் தாக்கம் :**

1. பாராளுமன்ற சீர்த்திருத்தங்கள் தேவைப்படும்.
2. 1825-ஆம் ஆண்டு தங்கள் உரிமைகளைப் போராடி பெற "தொழிலாளர் சங்கங்கள்" ஏற்படுத்தப்பட்டன.
3. பொருளாதார அடிப்படையில் சமதர்மம் என்ற கருத்தை தோற்றுவித்தது.

*** பொருளாதார தாக்கம் :**

1. உலகத்திலேயே அதிக முன்னேற்றமடைந்த நாடாக இங்கிலாந்து உருவானது.
2. குடிசைத் தொழில்கள் ஆலைகளுடன் போட்டியிட இயலாமல் நாளடைவில் இயல்பாகவே அழிந்தன.
3. "தொழிற்புரட்சி பணக்காரனை மேலும் பணக்காரனாக்கியது. ஏழைய மேலும் ஏழையாக்கியது" என்றனர்.

*** புதிய கொள்கை :**

1. பொருட்களின் உற்பத்தி பெருகியது.
2. பெரிய தொழிற்சாலைகளின் உடமையாளர்கள் செல்வந்தர்களாயினர்.
3. அதன் விளைவாக "முதலாளித்துவம் தோன்றியது.



kalvisolai

**3. தொழிற்புரட்சியின்போது நிகழ்ந்த முக்கிய சில அறிவியல் கண்டுபிடிப்புகளை குறிப்பிடுக.**

| | தொழில்கள் | பெயர்கள் | கண்டுபிடிப்புகள் | வருடம் |
|---|---|---|---|---|
| 1. | நெசவுத்தொழில் | ஜான்கே | பறக்கும் நாடா | 1738 |
| | | எலியாஸ்ஹோவே | தையல் இயந்திரம் | 1846 |
| 2. | இயக்கசக்தி | ஜார்ஜ் ஸ்டீபன்ஸன் | போக்குவரத்து நீராவி இயந்திரம் | 1814 |
| | | பாரடே | டைனமோ | 1831 |
| 3. | நிலக்கரி மற்றும் இரும்பு எஃகு தொழில் | ஹம்ரி டேவிஸ் | பாதுகாப்பு விளக்கு | 1816 |
| | | பெரிஸ்மர் | இரும்பு எகு உருவாக்கும்முறை | 1855 |
| 4. | போக்குவரத்து | ஜான்மெட்காப் | சாலை | - |
| | | ஜான் மெக்காடம் | ஆதும் சாலைகள் | - |
| 5. | தகவல் தொடர்பு | சர் ரௌலணட் ஹில் | பென்னி அஞ்சல் முறை | 1835 |
| | | சாமுவேல் மோர்ஸ் | தந்தி அனுப்பும் முறை | 1836 |

## குடிமையியல்
## 1. மாநில அரசு

### I. சரியான விடை : -

1. இந்தியா **29 மாநிலங்கள் மற்றும் ஏழு யூனியன் பிரதேசங்கள்** உள்ளடக்கியது.
2. மாநில நிறுவாகத்தின் தலைவர் **ஆளுநர்**
3. ஆளுநரை நியமிப்பவர் **குடியரசுத்தலைவர்**
4. முதலமைச்சரையும் மற்றும் மற்ற அமைச்சர்களையும் நியமிப்பவர் **ஆளுநர்**
5. அவசர சட்டங்களை வெளியிடுபவர் **ஆளுநர்**

### II. குறுகிய விடையளி :

**1. இந்தியாவிலுள்ள மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் எண்ணிக்கைகள் யாவை?**

- 29மாநிலங்கள்
- 7 யூனியன் பிரதேசங்கள்

**2. இந்தியா தலைநர் யாது?**

இந்தியாவின் தலைநகர் டெல்லி

**3. அமைச்சரவை எவ்வாறு அமைக்கப்படுகிறது?**

- மாநில முதலமைச்சரின் பரிந்துரையின் பேரில் அமைச்சர்களை ஆளுநர் நியமிக்கிறார்.
- சட்டமன்ற தொகுதிக்கு ஏற்ப அமைச்சர் நியமிக்கப்படுகிறார்கள்.

**4. கூட்டுப் பொறுப்புணர்வு என்றால் என்ன?**

- சட்டப்பேரவை அமைச்சரவையின் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், முதலமைச்சர் தலைமையில் செயல்படும் மாநில அமைச்சரவை முழுவதும் பதவி விலக வேண்டும்.

- இதுவே கூட்டுப் பொறுப்புணர்வு என்றழைக்கப்படுகிறது.

**5. மாநில சட்ட மன்றத்தின் கடமைகள் யாவை?**

- மாநில சட்ட மன்றம், மாநில பட்டியல் மற்றும் பொதுப்பட்டியலில் உள்ள துறைகளுக்கு தேவையான சட்டங்களை இயற்றுகிறது.
- மாநிலத்தின் நிதிச் சார்ந்த செயல்களை சட்டப் பேரவை கட்டுப்படுத்துகிறது.

## III. பத்தியளவில் விடையளி : -

**1. ஆளுநரின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் யாவை?**

**ஆளுநரின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் :**

- மாநில சட்டமன்றத்தில் பெரும்பான்மை கொண்ட கட்சியின் தலைவரை முதலமைச்சரின் அவரின் ஆலோசனையின் பேரில் மற்ற அமைச்சர்களையும், ஆளுநர் நியமனம் செய்கிறார்.
- மாநில அரசின் தலைமை வழக்கறிஞரையும், அரசுப் பணியாளர் தேர்வு ஆணையத்தின் தலைவரையும், மற்ற உறுப்பினர்களையும் பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர்களையும் நியமனம் செய்கிறார்.

<u>நிர்வாக அதிகாரம்</u> :

- மாநில அரசின் செயல்பாடு குறித்து குடியரசுத் தலைவருக்கு அறிக்கையகள் அனுப்புகிறார். மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெறும்போது, மாநில நிலவாகத்தை நேரடியாக மேற்கொள்கிறார்.

<u>நிதி அதிகாரங்கள்</u> : -

- ஆளுநர் அனுமதியின்றி, நிதி மசோதாக்களை சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்த முடியாது. துறைகளுக்கான மானியக் கோரிக்கைகள் ஆளுநரின் பரிந்துரையின் பேரில்தான் சட்ட மன்றத்தில் கொண்டு வரமுடியும்.

<u>நீதி அதிகாரங்கள் :</u>

- மாநில உயர்நீதி மன்றத்தால் தண்டனை பெற்ற குற்றவாளிகளை மன்னிக்கவும், தண்டனையைக் குறைக்கவும் அல்லது நீக்கவும் ஆளுநர் அதிகாரம் பெற்றுள்ளார்.
- எனினும் தண்டனையை அதிகப்படுத்த அதிகாரங்கள் பெற்றிருக்கவில்லை.

<u>பிற அதிகாரங்கள் :</u>

- சட்டப்பேரவை நடைபெறாத சமயங்களில், அவசரச் சட்டத்தைப் பிறப்பிக்கும் அதிகாரம் உண்டு.

**2. முதலமைச்சரின் முதன்மைப் பணிகள் யாவை?**

- *அமைச்சரவையை அமைத்தல்*
- அமைச்சர்களுக்குத் துறைகளை ஒதுக்கீடு செய்வது.
- கடமை தவறும்போது அமைச்சர்களை பதவி விலகக் கோருதல்
- ஆளுநர் அறிவிக்கையின்படி, துறைகளை அமைச்சர்களுக்கு மாற்றம் செய்வது.
- அமைச்சரவையின் தலைவராய் இருந்து, அமைச்சரவைக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குவது.
- ஆளுநர் மற்றும் அமைச்சர்களுக்கு இடையே தொடர்பாளராக செயல்படுதல்.
- பதவிக்காலம் முடியும் முன்பே சட்டப் பேரவையைக் கலைக்க ஆளுநருக்கு பரிந்துரைப்பது.

பாடசாலை

## 2. குடிமக்களின் உரிமைகளும், கடமைகளும்

### I. சரியான விடை : -

1. குடிமக்களின் அடிப்படை கடமைகள் பற்றி விளக்கும் அரசியலமைப்புத் திருத்தம் : **42**
2. அடிப்படை உரிமைகள் **6** தலைப்புகளில் பிரிக்கப்பட்டுள்ளது.
3. இந்தியா ஒரு **சமய சார்பற்ற நாடு**
4. சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களை அனுமதிக்கும் அரசியலமைப்புச் சட்டப்பிரிவு : **30**
5. அரசியலமைப்புச் சட்டப்பிரிவு பத்தொன்பது குடிமக்களுக்கு **ஆறு** உரிமைகளை வழங்குகிறது.

### II. குறுகிய விடையளி :

1. **அடிப்படை உரிமைகளை பற்றி சுருக்கமாக வரைக.**
   - ❖ சமத்துவ உரிமை - பிரிவு 14-18 வரை
   - ❖ சுதந்திர உரிமை - பிரிவு 19-22 வரை
   - ❖ சுரண்டலுக்கெதிரான உரிமை - பிரிவு 23-24 வரை
   - ❖ சமய சுதந்திர உரிமை - பிரிவு 25-28 வரை
   - ❖ பண்பாட்டு மற்றும் கல்வி உரிமை - பிரிவு 29-30 வரை
   - ❖ அரசியலைமைப்பிற்கு தீர்வு காணும் உரிமை - பிரிவு 32.

2. **மதச்சார்பான உரிமை என்றால் என்ன?**

- ❖ பிரிவு 25-இல் மதத்தைப் பின்பற்றவும் பரப்புவதற்கான சுதந்திரமும் உண்டு.
- ❖ பிரிவு 26, மதச்சார்பான நிறுவனங்களை நிறுவவும், நடத்தவும் தர்மப்பணிகளை மேற்கொள்ளவும் உறுதியளிக்கிறது.

3. **நெறிமுறைக் கோட்பாடுகள் என்றால் என்ன?**

- ❖ இந்திய அரசியலமைப்பு,˙, நாட்டை வழிநடத்த அரசு நெறிமுறைக் கோட்பாடுகளை வழங்கியுள்ளது.
  பகுதி IV 36 முதல் 51 வரை உள்ள பகுதியில் நெறிமுறைக் கோட்பாடுகள் இடம் பெற்றுள்ளன.

### III. பத்தியளவில் விடையளி :

1. **இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் உறுதி செய்யப்பட்டுள்ள அடிப்படை கடமைகள் பற்றி விவரிக்க.**
   **அடிப்படை உரிமைகள் :**
   - ❖ சமத்துவ உரிமை - பிரிவு 14-18 வரை
   - ❖ சுதந்திர உரிமை - பிரிவு 19-22 வரை
   - ❖ சுரண்டலுக்கெதிரான உரிமை - பிரிவு 23-24 வரை
   - ❖ சமய சுதந்திர உரிமை - பிரிவு 25-28 வரை
   - ❖ பண்பாடு மற்றும் கல்வி உரிமை - பிரிவு 29-30 வரை
   - ❖ அரசியலமைப்பிற்கு தீர்வு காணும் உரிமை - பிரிவு 32.

**சுதந்திர உரிமை :**

- ❖ பேச்சு மற்றும் கருத்துக்களை வெளியிடும் உரிமை.
- ❖ ஆயுதமின்றிக் கூட்டங்களை அமைதியாக நடத்தும் உரிமை
- ❖ சங்கங்கள் மற்றும் கழகங்கள் ஏற்படுத்தும் உரிமை.
- ❖ இந்தியாவின் எந்த பகுதிக்கும் செல்லும் உரிமை.

**சுரண்டலுக்கு எதிரான உரிமை :**

- ❖ ஒருவரை கட்டாயமாகவோ அல்லது ஊதியமின்றியோ வேலை செய்ய வைத்தல் கூடாது.
- ❖ 14 வயதிற்குகீழ் உள்ள குழந்தைகளை தொழிற்சாலை மற்றும் சுரங்கத் தொழிலில் அல்லது பாதுகாப்பற்ற பணிகளில் ஈடுபடுவதைத் தடை செய்கிறது.

**சமய சுதந்திர உரிமை :**

- ❖ பிரிவு 25-இல் மதத்தைப் பின்பற்றவும் பரப்புவதற்கான சுதந்திரமும் உண்டு.
- ❖ பிரிவு 26, மதச்சார்பான நிறுவனங்களை நிறுவவும், நடத்தவும் தர்மப்பணிகளை மேற்கொள்வும் உறுதியளிக்கிறது.

**பண்பாட்டு, கல்வி உரிமைகள் :**

- ❖ அரசியலமைப்பு பிரிவு 29-இன்படி சிறுபான்மையினர் மொழி, எழுத்து பண்பாட்டைப் பாதுகாக்கிறது.
- ❖ பிரிவு -30 சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களை நிறுவவும் மற்றும் நிர்வகிக்கவும் உரிமை அளிக்கிறது.

**அரசியலமைப்பிற்கு தீர்வு காணும் உரிமை :**

- ❖ குடிமக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படும்போது, நேரிடையாக மக்கள் உச்சநீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்ந்து பாதுகாப்பினைப் பெற உதவுகிறது.

2. **அரசு நெறிமுறைக்கோட்பாடுகளைப் பற்றி விளக்குக.**

அரசு நெறிமுறைக் கோட்பாடுகள அல்லது வழிகாட்டும் கோட்பாடுகள் :

- ❖ இந்திய அரசியலமைப்பு, நாட்டை வழிநடத்த அரசு நெறிமுறைக் கோட்பாடுகளை வழங்கியுள்ளது.
- ❖ பகுதி IV, 36 முதல் 51 வரை உள்ள பகுதியில் நெறிமுறைக் கோட்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

**மக்கள் நலனை அடைய அரசு பின்பற்றப் படவேண்டிய நெறிமுறைகள் :**

- ❖ சமூக, பொளாதார அரசியல் நீதி பெறுவது.
- ❖ அனைத்து அமைப்புகளிலும் மக்கள் நலனைக் காக்க, வருவாய் ஏற்றத் தாழ்வை நீக்க வேண்டும்.
- ❖ ஆண், பெண் அனைவருக்கும் சமமான வேலைவாய்ப்பு மற்றும் சம ஊதியம் உடல்நலத்திற்கு தீங்கு விளைவிக்காத வேலைவாய்ப்பு அளித்தல்.

**அரசு திட்டங்களைச் செயல்படுத்தும் நெறிமுறைகள் :**

- ❖ பொருளாதார உரிமைகளை பெறுதல்.
- ❖ சமநீதியும், இலவச சட்ட உதவியும் அளித்தல்.
- ❖ இலவச மற்றும் கட்டாய ஆரம்பக் கல்வி அளித்தல்.
- ❖ போதைப் பொருட்கள் மற்றும் மதுவை தடை செய்தல்.
- ❖ குடிசைத் தொழில்களை ஊக்குவித்தல்.



Padasalai.Net